# தமிழ் (1157)

## மதிப்பீட்டின் நோக்கங்கள்

இப்பாடம் கற்பிக்கப்படுவதன் முக்கிய நோக்கம், ஏற்கெனவே மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு:

### 1.1 கேட்டல்

1 எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 1.2 பேசுதல்

1 தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

### 1.3 படித்தல்

1 பல வகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்

2 பல வகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

### 1.4 எழுதுதல்

1 கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புகளில் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்

### 1.5 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 பல்வேறு தலைப்புகளில் தம் கருத்துகளையும், உணர்வுகளையும், நோக்குகளையும் சரளமாகவும் தெளிவாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 கொடுக்கப்படும் மின்னஞ்சல் தலைப்புகளில் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்

# தேர்வு அமைப்புமுறை

இப்பாடம் மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**<u>வினாத்தாள் 1</u>: (2 மணி நேரம், 60 மதிப்பெண்கள், 30%)**

இத்தாள் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு (மின்னஞ்சல்)**

இப்பிரிவில் கொடுக்கப்படும் இரண்டு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 110 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதுதல் வேண்டும். உறவுமுறை மின்னஞ்சல், தொழில்முறை மின்னஞ்சல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.

**'ஆ' பிரிவு (கட்டுரை)**

இப்பிரிவில் மூன்று கட்டுரைத் தலைப்புகள் இடம்பெற்றிருக்கும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுதல் வேண்டும்.

**<u>வினாத்தாள் 2</u>: (1½ மணி நேரம், 70 மதிப்பெண்கள், 35%)**

இத்தாள் 'அ', 'ஆ', 'இ' ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு (மொழி மரபும் பயன்பாடும்)**

இப்பிரிவில் மரபுத்தொடர்கள்/இணைமொழிகள், வாக்கியங்களை முடித்தெழுதுதல், அமைப்புச் சொற்கள் ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். அவை அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

**'ஆ' பிரிவு (தெரிவுவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 1 அல்லது 2 உரைநடைப் பகுதிகளையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**‘இ’ பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல் மற்றும் சொற்பொருள்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் எழுதுதல் வேண்டும். இப்பகுதியில் இடம்பெறும் ஐந்து சொற்களுக்கு அல்லது சொற்றொடர்களுக்கு இடம்நோக்கிப் பொருள் எழுதுதல் வேண்டும்.

**<u>வினாத்தாள் 3</u>: (70 மதிப்பெண்கள், 35%)**

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது. அவை வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் என்பன.

**<u>பகுதி 1</u>: வாய்மொழித் தேர்வு**

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது.
1 வாய்விட்டு வாசித்தல்
2 உரையாடல்

**1 வாய்விட்டு வாசித்தல்**

கொடுக்கப்படும் ஓர் உரைநடைப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்க வேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசை நயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2 உரையாடல்**

கொடுக்கப்படும் ஒளிக்காட்சி ஊக்கக்கூறைப் பயன்படுத்தித் தேர்வில் கலந்துகொள்வோர் தேர்வாளரோடு உரையாட வேண்டும். அந்த ஒளிக்காட்சி 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**<u>பகுதி 2</u>: கேட்டல் கருத்தறிதல்**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் மூன்று குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னர் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கேட்டல் கருத்தறிதல் தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள்.

# தேர்வு விவர அட்டவணை

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| 1<br>(2 மணி) | **கட்டுரை** | | | (30%) |
| | **'அ' பிரிவு**<br>(i) மின்னஞ்சல் எழுதுதல் (110 சொற்கள்) | மின்னஞ்சல் | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 20/10% |
| | **'ஆ' பிரிவு**<br>(ii) கட்டுரை (200 சொற்கள்) வகைகள்: நிகழ்வு, விளக்கம், வருணனை | கட்டுரை | 3<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 40/20% |
| 2<br>(1 மணி 30 நிமிடங்கள்) | **கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்** | | | (35%) |
| | **'அ' பிரிவு** | | | |
| | A1 இணைமொழி/மரபுத்தொடர் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 10/5% |
| | A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் | சுயவிடை | 5 | 10/5% |
| | A3 அமைப்புச் சொற்கள் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 10/5% |
| | **'ஆ' பிரிவு** | | | |
| | B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 5 | 10/5% |
| | **'இ' பிரிவு**<br>C5 சுயவிடைக் கருத்தறிதல் (5 சொற்பொருள் வினாக்கள் உட்பட) | சுயவிடை வினாக்கள் | 10 | 30/15% |

<table>
<tr><th>தாள்<br>(நேரம்)</th><th>பொருளடக்கம்</th><th>வினா<br>வகை</th><th>வினாக்களின்<br>எண்ணிக்கை</th><th>மதிப்பெண்<br>(மதிப்பளவு)</th></tr>
<tr><td rowspan="2">3<br>(10 – 15<br>நிமிடங்கள்)<br><br>(ஏறக்குறைய<br>30 நிமிடங்கள்)</td><td><u>வாய்மொழியும்<br>கேட்டல் கருத்தறிதலும்</u><br><br><u>பகுதி 1</u><br><br>வாய்மொழி<br>1 வாய்விட்டு வாசித்தல்<br>2 உரையாடல் (ஒளிக்காட்சி ஊக்கக்கூறையொட்டி அமைதல்)</td><td>சுயவிடை</td><td>1<br><br>1</td><td>(35%)<br><br>10 (5%)<br><br>40 (20%)</td></tr>
<tr><td><u>பகுதி 2</u><br><br>கேட்டல் கருத்தறிதல்</td><td>தெரிவுவிடை<br>வினாக்கள்</td><td>10</td><td>20 (10%)</td></tr>
</table>